# மேல்நிலை இரண்டாமாண்டு
# அரசியல் அறிவியல் மாதிரி வினாத்தாள்

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 200

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்: **20 x 1 = 20**

1. நிலஉடைமை அமைப்பு 'ஜமீன்தாரி' முறை என எந்த நாட்டில் அழைக்கப்பட்டது?
   அ) இந்தியா ஆ) அமெரிக்கா
   இ) ரஷ்யா ஈ) சீனா
2. இந்தியாவில் எந்த வயது வரை இலவச கட்டாயக்கல்வி அளிக்கப்படுகிறது?
   அ) 16 ஆ) 17
   இ) 18 ஈ) 13
3. சமுதாய, ஒப்பந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்கள்
   அ) ஜென்கஸ் ஆ) மார்கன்
   இ) S. ரூஸோ ஈ) சர் ஹென்றி மெயின்
4. இயற்கை நிலையை படம் பிடித்துக் காட்டிய கொள்கை
   அ) தெய்வீக கொள்கை ஆ) வலிமைக் கொள்கை
   இ) தாய்வழிக்கொள்கை ஈ) சமுதாய ஒப்பந்தக் கொள்கை
5. வருமான வரியை கட்டுப்படுத்துதல் என்பது எதனைக் குறிக்கின்றது?
   அ) பாரம்பரிய ஆளுமையை ஆ) பகுத்தறிவு சட்ட ஆளுமையை
   இ) சிறப்பியல்புகளை உடைய தலைமை ஆளுமையை
   ஈ) மேற்கூறிய அனைத்தும்
6. அரசியல் அறிவியல் என்று யார் முதல் முதலில் பயன்படுத்தினார்?
   அ) அரிஸ்டாடில் ஆ) பிளாட்டோ
   இ) ஜீன் போடின் ஈ) ஆடம் ஸ்மித்
7. 'கோக்கோ - கோலா' என்பது
   அ) பொது நிறுவனம் ஆ) தன்யார் நிறுவனம்
   இ) பன்னாட்டு தேச கழகம் ஈ) வரையறைக்குட்பட்ட கம்பெனி
8. எவற்றால் தேசிய இறைமை சவாலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது?
   அ) G.8 நாடுகள் ஆ) ஐரோப்பிய யூனியன்
   இ) நாட்டிடை நிதி நிறுவனங்கள் ஈ) G.7 நாடுகள்
9. கூட்டாட்சி என்ற வார்த்தை எம்மொழியிலிருந்து பெறப்படுகிறது?
   அ) இலத்தீன் ஆ) பிரெஞ்சு
   இ) 14 ஹிந்தி ஈ) சமஸ்கிருதம்
10. கேமிரா என்ற இலத்தீன் மொழி சொல்லின் பொருள்.
    அ) வீடு ஆ) கட்டிடம்
    இ) அமைப்பு ஈ) படம்

11. அதிகார பிரிவினை கொள்கையை வெளியிட்டவர்

அ) அரிஸ்டாடில் ஆ) மான்டெஸ்கியூ

இ) பிளாட்டோ ஈ) ரூசோ

12. நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கும்முறை எந்த நாட்டில் பின்பற்றப்பட்டது?

அ) இந்தியா ஆ) பிரான்ஸ் இ) இங்கிலாந்து
ஈ) ஜப்பான்

13. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு

அ) 26 சனவரி 1950 ஆ) 15 ஆகஸ்ட்டு 1947

இ) 26 சனவரி 1947 ஈ) 15 ஆகஸ்டு 1945

14. மக்கள் அவையின் மொத்த உறுப்புனர்கள் எண்ணிக்கை

அ) 552 ஆ) 545

இ) 500 ஈ) 550

15. நீதிப்பேரானைகள் எத்தனை?

அ) 2 ஆ) 3

இ) 4 ஈ) 5

16. உயர்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி எந்த வயது முடியும் வரை பதவி வகிப்பார்?

அ) 62 ஆ) 64

இ) 65 ஈ) 70

17. 73 - வது மற்றும் 74 - வது திருத்தங்கள் நடைமுறைக்கு வந்த ஆண்டு

அ) 1992 ஆ) 1993

இ) 1994 ஈ) 1995

18. பஞ்சாய்த்து இராச்சியம் யாரால் துவங்கி வைக்கப்பட்டது?

அ) காந்தியடிகள் ஆ) நேரு

இ) 14 இந்திராகந்தி ஈ) காமராஜர்

19. தேசிய மக்கள் தொகைக் கொள்கை இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1995 ஆ) 1950

இ) 1990 ஈ) 2000

20. எந்த சட்டதிருத்தத்தின் படி அரசியலமைப்பில் ஒரு புதிய பகுதி IV அ-வில் அடிப்படைக் கடமைகள் உள்ளடக்கப்பட்டன.

அ) 42 - வது ஆ) 44 - வது

இ) 73 - வது ஈ) 74 - வது

கோடிட்ட இடத்தை நிரப்புக் **10 x 1 = 10**

21. மக்கள் நல அரசு குறித்த சிந்தனை ___________ நாட்டில் முதல் முதலில் வேரூன்றியது.

22, இனப்பற்று தான் முதல் ___________ ஒற்றுமைக்கு காரணம்

23. தனியார் நடத்தையின் அரசியல் பகுப்பாய்வு என்பது ___________

24. இந்தியா ஒரு ____________ நாடாகும்.

25. இராஜ்ய சபை ____________ மன்றமாக கருதப்படுகிறது.

26. __________ நாட்டில் நீதிமறு ஆய்வு நடைமுறையில் இருந்து வருகிறது.

27. இந்தியக் குடியரசுத் தலைவர் ____________ தலைவர் ஆவார்.

28. மாநிலத்தில் அமைச்சரவை ___________ க்கு பொறுப்புடையதாக உள்ளது.

29. உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை ____________

30. இந்தியப் பொருளாதாரம் ஒரு ____________ பொருளாதாரம் ஆகும்.

**III.** கீழ்வருவன சரியா / தவறா என எழுதுக **10 x 1 = 10**

31. 'அரசு' இயற்கையாக தோற்றுவிக்கப்பட்ட அத்தியாவசியமான அமைப்பாகும்.

32. தெய்வீக தோற்றக் கொள்கை ஒரு நவீன கொள்கையாகும்.

33. புதிய அரசியல் அறிவியல் என்பது நடத்தை பகுப்பாய்வாகும்.

34. G-8 நாடுகளில் இந்தியா சேர்க்கப்பட்டுள்ளது.

35. செனட் என்பது அமெரிக்க நாட்டின் மேலவையாகும்.

36. நீதித்துறை மக்களாட்சியின் தூண் என்று கருதப்படுகிறது.

37. 42வது சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு 1950.

38. உயர்நீதிமன்ற நீதிபதிகள் பிரதம அமைச்சரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

39. 74 வது சட்டத்திருத்தம் நகர்பாலிகா சட்டம் என அழைக்கப்படுகிறது,

40. இந்திய திட்டமிடலின் தந்தையென காந்தியடிகள் அழைக்கப்படுகிறார்,

**IV.** பொருத்துக **10 x 1 = 10**

| | | |
|---|---|---|
| 41. அரசியல் சட்ட விதி 39 | - | சமுதாயத்தில் சமத்துவமின்மை |
| 42. ஒப்பந்த கோட்பாடு | - | இங்கிலாந்து |
| 43. உயர்குடியினர் கோட்பாடு | - | 25 |
| 44. அரசு சாரா அமைப்பு | - | ஆளுநர் |
| 45. தலைவர்முறை அரசாங்கம் | - | நெய்வேலி |
| 46. சட்டங்களின் உயிர் | - | சமவேலைக்கு ஒத்த ஊதியம் |
| 47. மக்களவை | - | எல்லையில்லா மருத்துவர்கள் |
| 48. அரசியல் சட்டவிதி 153 | - | 1991 |
| 49. நகரீயம் | - | மாண்டெஸ்கியூ |
| 50. புதிய தொழிற்கொள்கை | - | ஒப்பந்தம் |

பகுதி - 'ஆ'

**IV.** எவையேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமான விடையளி : **10 x 3 = 30**

51. நகர அரசினை வரையறு.

52. தெய்வீக தோற்றக் கோட்பாடு விளக்குக.

53. நடத்தை இயலை விளக்குக.

54. 'புதிய அரசியல் அறிவியல்' என்றால் என்ன?

55. மாக்ஸ்வீபரின் கருத்துப்படி ஆளுமை என்பது எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகிறது?

56. அறிவு சார்ந்த சமுதாயம் என்றால் என்ன?

57. செய்தி தொடர்பு தொழில் நூட்பத்தை விளக்குக.

58. ஒற்றை ஆட்சி - பொருள் தருக.

59. நீதி மறு ஆய்வு விளக்குக

60. மக்கள் அவை தலைவரின் பணிகள் என்ன?

61. கிராம நிர்வாக அலுவலர் பற்றி குறிப்பெழுதுக.

62. நகரீயம் என்பதை விளக்குக.

63. இந்தியா மக்கள்தொகைக் கொள்கையை விளக்குக

64. இந்திய விவசாயக் கொள்கையை விளக்குக.

65. நிர்வாக சீர்திருத்த ஆணையம் பற்றிய விபரம் தருக.

பகுதி - 'இ'

ஏதேனும் 6 வினாக்களுக்கு விடையளி (ஒரு பக்க அளவில்)

**6 x 10 = 60**

66. நிலப்பிரபுத்துவ அரசின் எழுச்சியை ஆய்வு செய்க,

67. சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை மதிப்பீடு செய்க.

68. அதிகாரத்தின் பொருள் விளக்கத்தினை தருக.

69. ஒரவை மற்றும் ஈரவை முறையிலுள்ள வேறுபாடுகளை எழுதுக.

70. நீதி மறு ஆய்வின் நிறை, குறைகளை விவரிக்க.

71. நாடாளுமன்றத்தின் பணிகள் யாவை?

72. தலைமைச் செயலரின் பணிகள் என்ன?

73. இராணுவக்கூட வாரியங்கள் பற்றி விவரிக்க.

74. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களை விவரிக்க.

பகுதி - 'ஈ'

எல்லா வினாக்களுக்கும் விரிவான விடையளி: (இரண்டு பக்க அளவில்)

**3 x 20 = 60**

75. மக்கள் நல அரசு குறித்து விரிவான கட்டுரை வரைக

(அல்லது)

அரசின் பரிணாம வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த காரணிகள் என்ன?

76. பாராளுமன்ற அரசு முறையின் சிறப்பம்சங்களை விவரிக்க.

(அல்லது)

இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் யாவை?

77. முதலமைச்சரின் பங்கினையும் பணிகளையும் விளக்குக.

(அல்லது)

கிராமப் பஞ்சாயத்தின் கட்டாயமான பணிகள் மற்றும் தன்விருப்பப் பணிகள் பற்றி கட்டுரை வரைக.